**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
**கோயம்புத்தூர் – 641003**

முனைவர் மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 – 6611302
நிகரி: 0422 – 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

பெறுநர், தேதி: 11.06.2026
ஆசிரியர்,

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் வேளாண்மை துறை அமைச்சர் ஆய்வு

மாண்புமிகு வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் திரு ஆர். வினோத் அவர்கள் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் பல்வேறு துறைகள் மற்றும் ஆராய்ச்சி நிலையங்களை பார்வையிட்டார். தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர் கா. சுப்பிரமணியன் அவர்கள் மாண்புமிகு வேளாண்மை துறை அமைச்சர் அவர்களை வரவேற்றார்.

முதலாவதாக பல்கலைக்கழக அதிகாரிகள் மற்றும் பேராசிரியர்களுடன் கலந்துரையாடலை தொடங்கினார். பின்னர் பல்கலைக்கழகத்தின் நெல் ஆராய்ச்சி மையத்தில் ஆய்வு மேற்கொண்டு அங்கு காட்சிப்படுத்தப்பட்ட நெல் ரகங்கள் மற்றும் அவற்றின் சாகுபடி குறித்தும் கேட்டு தெரிந்து கொண்டார். அதைத்தொடர்ந்து பல்கலைக்கழக பழத் தோட்டத்தில் ஆய்வு மேற்கொண்டார். பின்னர் பல்கலைக்கழக மாணவ மாணவியர் தங்கும் விடுதி மற்றும் உணவு அருந்தும் விடுதி ஆகியவற்றை ஆய்வு செய்து மாணவ மாணவிகளுடனும் கலந்துரையாடி விடுதியின் நிறைகுறைகளை கேட்டு அறிந்தார்.

அதைத்தொடர்ந்து பல்கலைக்கழகத்தின் மத்திய கிழக்கு பண்ணை, வேளாண் பொறியியல் துறை, வேளாண் வணிக மையம், தாவரவியல் பூங்கா, நானோடெக், காக்ஸ்பிட், பூச்சி அருங்காட்சியகம் ஆகிய துறைகளையும் பார்வையிட்டார். இறுதியாக பல்கலைக்கழக மாணவ மாணவிகளுடன் அண்ணா அரங்கில் கலந்துரையாடி மாணவர்களுக்கு வேளாண்மையின் முக்கியத்துவம் மற்றும் அவற்றின் இன்றியமையாமை குறித்து சிறப்புரை வழங்கினார். மாணவ

மாணவிகளும் ஆர்வத்துடன் வேளாண்மை துறை அமைச்சருடன் கலந்துரையாடினர்.

இந்நிகழ்வுகளை பல்கலைக்கழக பொறுப்புத் துணைவேந்தர் முனைவர் கா சுப்பிரமணியன், பல்கலைக்கழக வேளாண்மை முதன்மையர் முனைவர் நா வெங்கடேசபழனிச்சாமி மற்றும் பல்கலைக்கழக ஆராய்ச்சி இயக்குனர் முனைவர் மா ரவீந்திரன் ஆகியோர் ஒருங்கிணைப்பு செய்தனர்.

**மக்கள் தொடர்பு அலுவலர்**